செ.வெ.எண்.452/2018 நாள்: 28.08.2018

## பத்திரிக்கை செய்தி

திருவண்ணாமலை மாவட்ட சமூகநல அலுவலகத்தில், குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டம் - 2005ன் கீழ், ஒப்பந்த ஊதிய அடிப்படையில், (ஓராண்டு ஒப்பந்த பணி) இளநிலை உதவியாளர்/தட்டச்சர் பதவி - 1 இடம் நிரப்புவதற்கு தகுதிகளையுடைய நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேற்கண்ட பணியிடத்திற்கு திருவண்ணாமலை மாவட்டத்தை சேர்ந்த விண்ணப்பதார்கள் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் தேர்ச்சி பெற்றவராகவும், கணினி பயன்பாட்டினை அறிந்தவராகவும் மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் இருக்க வேண்டும் (உரிய சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்)

1. இனசுழற்சி - பொதுப்பிரிவு (முன்னாள் இராணுவத்தினர்).
2. தேர்வு முறை - எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வு அடிப்படையில் தேர்வு செய்யப்படுவர்.

மேற்கண்ட தகுதியுடைய நபர்கள், தனிநபர் விவரங்கள் அடங்கிய படிவம் (Bio-Data) வண்ண பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் உரிய சான்றுகளுடன் ஒரு வார காலத்திற்குள் (05.09.2018) மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 2-வது தளம், வேங்கிக்கால், திருவண்ணாமலை என்ற முகவரிக்கு நேரில் அல்லது தபாலில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.சு.கந்தசாமி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், திருவண்ணாமலை.**